மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டுக் கோருரிமை தீர்ப்பாயம்
சார்பு நீதிமன்றம், நாமக்கல்
முன்னிலை திருமதி.எஸ். தங்கமணி, எம்.ஏ., எம்.எல்.,
முன்னிலை அலுவலர்/சார்பு நீதிபதி, நாமக்கல்
2026– ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 28ம்நாள் செவ்வாய்க்கிழமை
மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு கோருரிமை
முதலேற்பு மனு எண்.188/2025
CNR No.TNNM1D–0002112025

1.R.பாவாயி (79), க/பெ.ராமசாமி,
எண்.2/24, கொண்டிச்செட்டிப்பட்டி,
பெரியப்பட்டி (அஞ்சல்),
நாமக்கல் மாவட்டம்.
2.S.முத்துலக்ஷிமி (61), க/பெ.சேரலாதன்,
பழைய எண்.M1/17, புது எண்.5/410,
முல்லை நகர், மோகனூர் ரோடு,
நாமக்கல் மாவட்டம்.
3.R.செல்வராஜு (56), த/பெ.ராமசாமி,
எண்.2/24, கொண்டிசெட்டிப்பட்டி,
பெரியப்பட்டி அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம்.
4.N.ராஜாமணி (52), க/பெ.நடராஜன்,
எண்.3/74B, ரோஜா நகர்,
கொண்டிச்செட்டிப்பட்டி,
பெரியப்பட்டி அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம். ... மனுதாரர்கள்,

/எதிராக/

1.M.சாந்தி த/பெ. மணி,
எண்.1/111, மாரியம்மன் கோவில் தெரு,
கொண்டிச்செட்டிப்பட்டி,
பெரியப்பட்டி அஞ்சல்,
நாமக்கல் மாவட்டம்.
2.M/s.சோழமண்டலம் MS ஜெனரல் இன்சூரன்ஸ்
கம்பெனி லிமிட்டேட்,
2வது தளம்,
DARE HOUSE,
2, N.S.C.போஸ் ரோடு,
சென்னை.
கிளை அலுவலகம்
எண்.615/128 A3,
தரை தளம்,
சேலம் ரோடு,
நாமக்கல். ... எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது முதலில் நாமக்கல் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு எம்.சி.ஓபி எண்.173/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற ROC No.56446/2020/G Dt.19.08.2024ன் உத்திரவுப்படி இந்நீதிமன்றத்திற்கு விசாரணைக்காக மாறுதலாக வரப்பெற்று எம்.சி.ஓபி எண்.188/2025 என கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இம்மனு என் முன்பு 27.07.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்ததில் இம்மனுவின் மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.தங்கராஜ், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்ட 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார். 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.திருமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

உத்திரவு

மனுதாரர்கள் சாலை விபத்தினால் இறந்த ராமசாமி என்பவரது வாரிசுதாரர்கள் இழப்பீடு கேட்டு மோட்டார் வாகன சட்டப் பிரிவு 166 ன் கீழ் கடந்த 27.06.2025 அன்று இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

விபத்து நடைபெற்ற நாள்	21.07.2024
மனு தாக்கல் செய்த நாள்	27.06.2025

2. <u>மனுவின் சுருக்கம்:</u>

விபத்தில் காயம்பட்டு இறந்த ராமசாமி விபத்து சமயத்தில் வயது 85 ஆகும். அவர் கடந்த 21.07.2024ம் தேதி மாலை 04.40 மணியளவில் கொண்டிசெட்டிப்பட்டியில் உள்ள அவரது வீட்டின் முன்பு நின்றுகொண்டிருந்தபோது TN 88 K 5582 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து ராமசாமி மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்திற்கு TN 88 K 5582 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநரின் கவனக்குறைவே முழுக்காரணம்

ஆகும். விபத்திற்கு பின்னிட்டு ராமசாமிக்கு நாமக்கல் CM பெஸ்ட் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டும் பின்னர் மேல்சிகிச்சைக்காக சேலம் நியூரோ பவுண்டேசன் மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டும் பின்னர் தொடர் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டும் சிகிச்சை பலனின்றி 29.07.2024ம் தேதி அன்று இறந்துவிட்டார். நாமக்கல் அரசு மருத்துவமனையில் விபத்தில் இறந்த ராமசாமியின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. மேற்படி விபத்து குறித்து நாமக்கல் காவல் நிலைய குற்ற எண்.355/2024 BNS பிரிவுகள் 281, 125(a) @ 106 ன் கீழ் விபத்து ஏற்படுத்திய TN 88 K 5582 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் இறந்த ராமசாமி விவசாயம் செய்து மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வந்து தன்னை சார்ந்திருந்த மனுதாரர்களை காப்பாற்றி வந்துள்ளார், தற்போது அவர் இறந்துவிட்ட காரணத்தினால் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியுள்ள மனுதாரர்களுக்கு பல்வேறு தலைப்புகளின் கீழ் மனுதாரர்கள் கோரியுள்ள இழப்பீட்டு தொகை ரூ.17,00,000/- ஐ 1 மற்றும் 2ம் எதிர்மனுதாரர்கள் செலுத்த உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்ட 1ம் எதிர்மனுதாரரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் 1ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தோன்றா தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. 2ம் <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர்களின் மனு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரரால் எதிர் உரையில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை சாட்சியம் மற்றும் ஆவண ஆதாரங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும்.

விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் TN 88 K 5582 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் இருசக்கர வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும், சாலைவிதிகளை பின்பற்றியும் ஓட்டிச்சென்றுக்கொண்டிருந்தபோது விபத்தில் இறந்த இராமசாமி சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் சாலையில் வாகனங்கள் வருவதை கவனிக்காமல் சம்பவயிடத்தில் திடீரென சாலையை குறுக்காக கடந்தபொழுது விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்திற்கு விபத்தில் இறந்த ராமசாமியின் கவனக்குறைவே முழுக்காரணம் ஆகும். 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு எந்த வகையிலும் பொறுப்பல்ல. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் 3 நபர்கள் பயணம் செய்துள்ளனர். இது காப்பீட்டு விதிமுறை மீறலாகும். திருத்தப்பட்ட புதிய மோட்டார் வாகன சட்டப்பிரிவின்படி காப்பீட்டு விதிமுறை மீறல்கள் ஏதேனும் இருப்பின் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல. 1ம் எதிர்மனுதாரரே இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். மேலும் விபத்தில் இறந்த ராமசாமி தொழில், வயது, வருமானம், காயத்தின் தன்மை ஆகியவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும், மனுதாரர்கள் பல்வேறு தலைப்புகளின்கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது. மனுதாரர்களுக்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல. எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சங்கதிகளை மறுத்தும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டியவை</u>

1	யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது?
2	மனுதாரர்களுக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்பானவர்கள் யார்?
3	மனுதாரர்களுக்கு கிடைக்க கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு?

6. <u>பிரச்சனை –1</u>

இரு தரப்பிலும் கற்றறிந்த வழக்கறிஞர்கள் அவரவர்கள் வழக்குரையின் அடிப்படையிலும் ஆவணங்களின் அடிப்படையிலும் வாதிட்டார்கள். மனுதாரர்கள் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.28 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றா தரப்பினராக உள்ளார். 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு

சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 வரையும் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

விபத்தில் இறந்த ராமசாமியின் மனைவி 1ம் மனுதாரர் 2 மற்றும் 4 மனுதாரர்கள் மகள்கள் ஆவார்கள். 3ம் மனுதாரர் மகன் ஆவார். விபத்தில் இறந்த ராமசாமியின் மகன் செல்வராஜு 3ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் விபத்து சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லையென்றும், TN 88 K 5582 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார். இவரது சாட்சியத்தின் மூலமாக நாமக்கல் காவல் நிலைய குற்ற எண்.355/2024 BNS பிரிவுகள் 281, 125(a) @ 106 ன் கீழ் விபத்து ஏற்படுத்திய TN 88 K 5582 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநர் மீது வழக்கு வழக்கு பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.2 ஆக மேற்படி விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக ஜெகநான் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் கடந்த 21.07.2024ம் தேதி அன்று மாலை 04.40 மணியளவில் கொண்டிசெட்டிப்பட்டியில் உள்ள எனது வீட்டு வாசலில் நான் போன் பேசி கொண்டிருந்தபோது செல்வராஜும், அவரின் தந்தை ராமசாமியும் கொண்டிசெட்டிப்பட்டியில் உள்ள அவர்கள் வீட்டின் முன்பு நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது TN 88 K 5582 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் சாலைவிதிகளை பின்பற்றாமல் அதிவேகமாகாவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் தாருமாறாகவும் ஓட்டி வந்து நின்று கொண்டிருந்த ராமசாமி மீது மோதி விபத்து ஏற்பட்டு விட்டது என்றும் மேற்படி விபத்திற்கு TN 88 K 5582 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகன ஓட்டுநரின் அதிவேகமும், அஜாக்கிரதையும், கவனக்குறைவும் காரணம் என்றும் மேற்படி விபத்தை சம்பவத்தை நேரில் பார்த்தாகவும் குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளார்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் விபத்தில் இறந்த ராமசாமி மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதால் விபத்து ஏற்பட்டுள்ளது. அந்த வாகனம் நிற்காமல் சென்றுவிட்டதாகவும் மேற்படி அடையாளம் தெரியாத வாகனத்தின் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது

என்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கும் இந்த விபத்திற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லையென்றும் அந்த வாகனம் விபத்தில் சம்மந்தப்படவில்லையென்றும், 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு எந்தவித சேதாரமும் இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், விபத்தில் இறந்த ராமசாமியின் மகன் கொடுத்த வாக்குமூலத்திலும் அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் தான் விபத்து ஏற்பட்டதாக வாக்குமூலம் அளித்துள்ளார். இந்த வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை. இறந்த ராமசாமி மீது மோதிய அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்படுத்திவிட்டு நிற்காமல் சென்றுவிட்டதால் 2ம் எதிர்மனுதாரரிடமிருந்து இழப்பீடு பெறும் நோக்கில் மனுதாரரும் 1ம் எதிர்மனுதாரரும் ஒன்று சேர்ந்துகொண்டு 1ம் எதிர்மனுதாரர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு மனு தாக்கல் செய்து சாட்சியமும் அளித்துள்ளனர். அதனால் தங்களது காப்பீட்டு நிறுவனம் மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்று வாதம் முன்வைத்து தனது வாதத்திற்கு ஆதரவாக 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 வரையும் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மனுதாரர் தரப்பில் அதனை மறுத்தும் விபத்தானது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் மட்டுமே விபத்து ஏற்பட்டது என்றும், 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் விபத்தில் ஈடுபட்டதால் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு உட்படுத்தப்பட்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்துள்ளதாகவும் மற்றும் மேற்படி விபத்து வழக்கை காவல்துறையினர் புலனாய்வு செய்து 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனர் ராஷ்மிகா என்பவரின் கவனகுறைவால் விபத்து ஏற்பட்டதாக தெரியவந்ததால் அவர் மீது குற்ற இறுதியறிக்கை ம.சா.ஆ.6 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 2ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர்கள் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் பதிவு எண் தெரியாத scooty இரு சக்கர வாகன ஓட்டுநர்

கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் துறையினர் விபத்து வழக்கை புலன் விசாரணை செய்து 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.6 தாக்கல் செய்துள்ளனர்.

விபத்து குறித்து குற்ற இறுதி அறிக்கை ம.சா.ஆ.6 ஆனது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாக குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தனது வாகன ஓட்டுநர் விபத்திற்கு காரணமல்ல என்பது குறித்தும், தனது வாகனம் விபத்தில் பொய்யாக சம்மந்தப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அவர் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் 1ம் எதிர்மனுதாரரோ அல்லது அவரது வாகன ஓட்டுநரோ மேற்படி எந்த புகார் மற்றும் மேல் நடவடிக்கை எடுத்ததாக ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற அழைப்பானையை பெற்றுக்கொண்டும் வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்து வழக்கு நடத்தாமல் தோன்றாதரப்பினராக உள்ளார்.

2–ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் உண்மையாக இருந்தால் காவல்துறை அதிகாரிக்கு விபத்து குறித்து முறையாக புலன் விசாரணை செய்ய புகார் கொடுத்திருக்கவேண்டும். ஆனால் காப்பீட்டு நிறுவனம் சார்பாக ம.சா.ஆ.6 ஆவணமான குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள சங்கதிகள் தவறானது என தெரிவித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மேலும் காப்பீட்டு நிறுவனத்தின் புலன் விசாரணை அறிக்கையை கூட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முழுமையான புலன்விசாரணைக்கு காப்பீட்டு நிறுவனம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. புகார் எதுவும் கொடுக்கப்படவில்லை. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரால் ஏற்பட்டது என்று காவல் துறையினர் புலன் விசாரணை செய்து ம.சா.ஆ.6 ஆவணமான குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளனர். விபத்தானது அடையாளம் தெரியாத வாகனம் மோதியதில் ஏற்பட்டது என்று 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தை உறுதிபடுத்தும் வகையில் சாட்சிய ஆதாரமோ ஆவண ஆதாரமோ 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படாத நிலையில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் ஏற்கதக்கது அல்ல.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1 மற்றும் ம.சா.2 சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவர்கள் விபத்து குறித்தும், விபத்து நடந்த விதம் குறித்தும் முதல் விசாரணையில் அளித்துள்ள சாட்சியத்தை முரண்படுத்தும் விதமாக குறுக்கு விசாரணையில் சங்கதிகள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ம.சா.1 மற்றும் ம.சா.2 ன் சாட்சியங்கள் மற்றும் ம.சா.ஆ.5 மற்றும் ம.சா.ஆ.6 சான்றாவணங்களிலிருந்து 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது நிரூபிக்கப்பட்டுள்ளது. எ.ம.சா.1 மற்றும் எ.ம.சா.2 அலுவலக சாட்சிகள் ஆவார்கள். அவர்களுக்கு விபத்தோடு நேரடியாக எந்த தொடர்பும் இல்லை. அவர்கள் விபத்து குறித்தும் அஜாக்கிரதை பொருத்தும் எந்தவிதமான சாட்சியமும் அளிக்கவில்லை. 2ம் எதிர்மனுதாரர் வாதத்தை உறுதிபடுத்தும் வகையில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் அல்லது சம்பவ இடத்திற்கு அக்கம் பக்கத்திலுள்ள நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மனுதாரர்களின் சாட்சியத்தினை மறுக்கும் வகையில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மனுதாரர்கள் தரப்பு ஆவணங்களின் அடிப்படையிலும் சாட்சியத்தின் அடிப்படையிலும் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் மட்டுமே இந்த விபத்து ஏற்பட்டது என பிரச்சனை 1 ஐ பொறுத்து மனுதாரர்க்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

7. <u>பிரச்சனை – 2</u>

விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் TN 88 K 5582 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர வாகனம் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு இருந்ததாக மனுவில் கூறப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 காப்பீட்டு பாலிசியை பரிசீலனை செய்து பார்க்கும்போது 1ம் எதிர்மனுதாரரின் TN 88 K 5582 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு 23.11.2023 முதல் 22.11.2028 வரை காப்பீடு செயலில் உள்ளது. விபத்து தேதியான 21.07.2024 அன்று காப்பீடு செயலில் உள்ளது தெரியவருகிறது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுனருக்கு விபத்து சமயத்தில் உரிய ஓட்டுநர் உரிமம் இல்லை எனவும் 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தில் விபத்தின்போது மூன்று நபர்கள் பயணம் செய்துள்ளனர் என்றும் அது

காப்பீட்டு விதிமீறல் என்றும் திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டத்திருத்ததின்படி 1ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றும் அதனால் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் கடமைப்பட்டதல்ல. என வாதம் முன்வைக்கப்பட்டு தனது வாதத்திற்கு ஆதரவாக 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு சா.சா.ஆ.1 மற்றும் சா.சா.ஆ.2 வரையும் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் நாமக்கல் தெற்கு வட்டாரப்போக்குரவத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் வடிவேலு என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள TN 88 K 5582 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை மற்றும் சோதனை அறிக்கை தாக்கல் செய்கிறேன். அது X2 ஆகும். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தை ஓட்டியவர் ராஷ்மிகா த/பெ மணி, கொண்டிசெட்டிப்பட்டி, பெரியப்பட்டி நாமக்கல் மாவட்டத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் மேற்படி வாகனத்தின் ஓட்டுநர் ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கவில்லை என்று அதற்கு சோதனை அறிக்கையும் வழங்கப்பட்டது. மோட்டார் வாகன சட்டப்படி ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி தவறாகும் என்று சாட்சியமளித்துள்ளார்.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் உதவி சட்ட மேலாளராக பணிபுரியும் செல்வசேரன் என்பவர் எ.ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை. மேலும் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்துள்ளனர் என்றும் இது காப்பீட்டு விதிமுறை மீறல் ஆகும். அதனால் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றும் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதங்களில் குறிப்பிடும் சங்கதிகளை குறிப்பிட்டும் அவர் தனது எதிருரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டும் சாட்சியமளித்து TN 88 K 5582 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர

வாகனத்தின் காப்பீட்டு பாலிசியை எ.ம.சா.ஆ.1 ஆகவும், 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்ய கோரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எ.ம.சா.ஆ.2 ஆகவும், அஞ்சலக ஒப்புதல் அட்டை எ.ம.சா.ஆ.3 ஆகவும், 1ம் எதிர்மனுதாரர் மற்றும் வாகன ஓட்டுநர் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாமல் திருப்பப்பட்ட கவர் எ.ம.சா.ஆ.4 ஆகவும் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார்.

எ.ம.சா.2 ஐ மனுதாரர்கள் தரப்பில் செய்யப்பட்டுள்ள குறுக்குவிசாரணையில் கீழ்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

TN 88 K 5582 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர வாகனம் விபத்தின்போது எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். 3ம் நபருக்கான பிரீமியம் வசூல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்த மனுதாரர் 3ம் நபர் என்றால் சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார்.

மேற்படி 2வது எதிர்மனுதாரரரின் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியின் சாட்சியத்திலிருந்து 1வது எதிர்மனுதாரின் TN 88 K 5582 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர வாகனத்திற்கு விபத்து தேதியில் காப்பீடு செயலில் உள்ளது ம.சா.ஆ.3 மற்றும் எ.ம.சா.ஆ.1 ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. சா.சா.ஆ.2 ன் படி 1வது எதிர்மனுதாரின் TN 88 K 5582 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலனை செய்து பார்க்கும்போது மோட்டார் வாகன ஆய்வின்போது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் ஓட்டுநர் உரிமத்தை காண்பிக்கப்படாததால் DL Not produced CR Issued என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இழப்பீட்டு வழக்கில் 1ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு சார்வு செய்யப்பட்டு பின்னரும், அவர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழக்கு நடத்த முன்வரவில்லை. அவரை நீதிமன்றத்தில் அழைத்தும் அஜாரில்லாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். இதுநாள் வரை 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் உரிமத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. விபத்தின் போது 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும்

சா.சா.ஆ.2 சான்றாவணங்களின் அடிப்படையில் விபத்தின்போது 1ம் எதிர்மனுதாரரின் TN 88 K 5582 என்ற பதிவுஎண் கொண்ட இருசக்கர வாகனத்தினை ஓட்டிய 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து தேதியான 21.07.2024 அன்று முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரியவருகிறது.

மனுதாரர்கள் தரப்பில் CMA (MD) Nos.517/2025 and 213, 327,419, 432, 442 of 2026 and CMP(MD) Nos.1874, 2962, 3943, 4103, 4212 of 2026 and 8904 of 2025 The bank Manager ICICI Lombard General Insurance Limited and Mariyapushpam and others என்ற மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற முன் தீர்ப்பில் காப்பீட்டு விதிமுறை மீறல் இருந்ததாலும் pay and recovery உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் விபத்தின் போது இருசக்கர வாகனத்தில் மூன்று நபர்கள் பயணம் செய்துள்ளதாலும் காப்பீடு விதிமுறை மீறல் உள்ளதால் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகையை யார் வழங்கவேண்டும் என்பது தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது. இந்த மனுவின் மனுதாரர் 2ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தை பொறுத்தவரையில் 3ம் தரப்பினர் ஆவார்.

காப்பீடு ஒப்பந்தம் என்பது வாகன உரிமையாளருக்கும், காப்பீட்டு நிறுவனத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் ஆகும். இந்த ஒப்பந்த விதி மீறலுக்காக விபத்தில் காயமடைந்த நபருக்கு அநீதி ஏற்படக்கூடாது.

ஆகவே இந்த வழக்கிலும் 1–ம்எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம் என பிரச்சனை 1–ல் முடிவு செய்துள்ளதாலும், 1–ம்எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்தின்போது காப்பீடு செயலில் உள்ளதாலும், 1–ம்எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டு நிறுவனமான 2–ம் எதிர்மனுதார் மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையை கொடுக்க பொறுப்பானவர் என்றும், இந்த இழப்பீட்டுத்தொகையை சட்டப்படி இவ்வுத்திரவின் அடிப்படையிலேயே 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டும் (Pay and Recover) என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

8. <u>பிரச்சனை –3</u>

விபத்தில் இறந்த ராமசாமி வயது 85 என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை அறிக்கை ம.சா.ஆ.7ல் ராமசாமியின் வயது 85 எனவும், ம.சா.ஆ.8 இறப்பு சான்றில் ராமசாமியின் வயது 84 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.8 இறப்பு சான்றின் படி விபத்து சமயத்தில் விபத்தில் இறந்த ராமசாமியின் வயது 84 என்பது தெரியவருகிறது. விபத்தில் இறந்த ராமசாமி விபத்து சமயத்தில் விவசாயம் செய்து மாதம் ரூ.25,000/– சம்பாதித்து வந்ததாகக் மனுவில் குறிப்பிட்டுள்ளார்கள். விபத்தில் இறந்த ராமசாமியின் தொழில் மற்றும் வருமானத்தை காண்பிக்கும் வகையில் ஆவண ஆதாரங்கள் தாக்கல் செய்ய இயலாது.

மனுவில் சொல்லப்பட்டுள்ள விபத்தானது 21.07.2024 ல் நடைபெற்றுள்ளது என்பதை கருத்தில் கொண்டும், ம.சா.ஆ.8 இறப்பு சான்றின் படி இறந்து போன ராமசாமி என்பவரின் வயது 84 என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை கருத்தில்கொண்டும் இறந்து போன ராமசாமியின் தோராய மாத வருமானம் ரூ.8,000/– என இந்நீதிமன்றம் நிர்ணயம் செய்கிறது.

<u>சுய செலவினத்திற்கான கழிவு மற்றும் பெருக்கல் எண் கணக்கிடுதல்</u>

ம.சா.ஆ.9 வாரிசு சான்றிதழின் படி இறந்து போன ராமசாமியை சார்ந்திருப்பவர்கள் 4 நபர்கள் என்பது தெரிய வருகிறது. இதன் காரணமாகவும், இறந்த போனவரின் வயது 84 என்பதாலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் சரளவர்மா எதிர் டெல்லி டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் மற்றும் ஒருவர் 2009(2) TNMAC 1 (SC) என்ற வழக்கில் கூறியுள்ள படி சுய செலவினங்களுக்காக 1/4 கழித்து கொள்ளவும் பின்பு ஆண்டு வருமானத்தினை 5ல் ஆல் பெருக்கிட இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேற்சொன்ன விவரங்களின் அடிப்படையில் கணக்கிடும் போது வரும் 8,000 – 2,000 = 6,000 X 12 = 72,000 x 5 = 3,60,000/–என்பது மனுதாரர்களுக்கு ஏற்பட்ட வருமான இழப்பாக தீர்மானிக்கப்படுகிறது.

மாண்புமிகு உச்ச நீதிமன்றம் நேஷனல் இன்சூரன்ஸ் எதிர் பிரனாய்சேத்தி 2017(16) SCC 680 என்ற வழக்கிலவழங்கப்பட்டுள்ள தீர்ப்பில் கூறியுள்ள வழிகாட்டுதலின்படி 1வது மனுதாரர் வாழ்க்கைத்துணை நல்லுறவு இழப்பு (spousal consortium) என்ற தலைப்பில் ரூ.25,000/–மும், 2 முதல் 4ம் மனுதாரர்களுக்கு

(Parental consortium) என்ற தலைப்பில் தலா ரூ.25,000/– (ரூ.25,000/–x3 = ரூ.75,000/–)மும், அடுத்ததாக மனுதாரர்கள் அனைவரும் பொதுவாக இறுதி சடங்கு செய்த செலவிற்காக ரூ.10,000/–மும், அறிவு சார்வு சொத்து இழப்பு (Loss of Estate) என்ற தலைப்பில் ரூ.10,000/–மும் பெற உரிமை உள்ளவர்கள் ஆவார்கள். இதன்படி மொத்த தொகையான (25,000 + 75,000 + 10,000 + 10,000) ரூ.1,20,000/– என வரும் தொகையினை மேற்சொன்ன தலைப்புகளின் கீழ் இழப்பீடாக மனுதாரர்கள் பெற உரிமையுள்ளவர்கள் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

மனுதாரர்கள் மேற்படி மருத்துவமனையில் விபத்தில் இறந்த ராமசாமி சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ செலவாக ரூ.4,09,122/– செய்ததாக குறிப்பிட்டு ம.சா.ஆ.14 ஆவணம் தாக்கல் செய்துள்ளார். ம.சா.ஆ.14 ஆவணத்தினை பரிசீலனை செய்து பார்க்கும் போது மனுதாரர்களுக்கு **மருத்துவ செலவாக** ரூ.89,026/– மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது ஆகும்.

1	வருமான இழப்பு	ரூ.3,60,000/–
2	வாழ்க்கைத்துணை நல்லுறவு இழப்பு	ரூ.25,000/–
3	Parental consortium	ரூ.75,000/-(ரூ.25,000/-x3)
4	இறுதி சடங்கு	ரூ.10,000/–
5	அறிவு சார்வு சொத்து இழப்பு	ரூ.10,000/–
6	மருத்துவபில்கள்	ரூ.4,09,122/-
	மனுதார்களுக்கு கிடைக்கக் கூடிய மொத்த இழப்பீட்டு தொகை	ரூ.8,89,122/–

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டதன் அடிப்படையில் மொத்த எதிர்கால வருவாய் இழப்பு மற்றும் ஏனைய தலைப்புகளின் கீழ் சேர்த்து மொத்த இழப்பீடான ரூ.8,89,122/– தொகையை இறந்து போனவரை சார்ந்திருக்கும் மனுதாரர்கள் பெறத்தக்க தகுதியானர்வர்கள் என்றும் 2–ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு இழப்பீடு தொகையை கொடுக்க பொறுப்பானவர் என்றும் இந்த இழப்பீட்டுத்தொகையை சட்டப்படி இவ்வுத்திரவின் அடிப்படையிலேயே 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டும் (Pay and Recover) என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக, மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு

(1) 2ம் எதிர்மனுதாரர் 1 முதல் 4 மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.8,89,122/– செலுத்தவேண்டும் என்றும் இந்த இழப்பீட்டுத்தொகையை சட்டப்படி இவ்வுத்திரவின் அடிப்படையிலேயே 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டும் (Pay and Recover) என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(2) மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5 % வட்டி மற்றும் செலவு தொகை சேர்த்து 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்.

(3) மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரர்களுக்கு வட்டி கிடைக்கத்தக்கதுதல்ல என்றும்

(4) மேற்படி இழப்பீட்டுதொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான State Bank of India Account No.43360446669 ல் E–Transfer மூலம் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தியதற்கான வங்கிக்கு அனுப்பிய அறிவுரையினை நீதிமன்றத்தில் உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும்.

(5) மேற்படி இழப்பீட்டு தொகையினை பொருத்தவரையில் 1ம் மனுதாருக்கு ரூ.5,89,122/– மும் 2 முதல் 4 மனுதாரர்களுக்கு தலா ரூ1,00,000/– (ரூ.1,00,000/–x3 = ரூ.3,00,000/–) மும், 1 முதல் 4 மனுதாரர்களுக்குரிய தொகை முழுவதையும் மனு தாக்கல் செய்வதன் மூலம் தங்களது வங்கிக் கணக்கின் மூலம் பெற்றுக்கொள்ளவேண்டுமெனவும்,

(6) வழக்கறிஞர் ஊதியம் ரூ.17,391/– அவரது வங்கி கணக்கிற்கு E–Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும்.

(7) மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்ற கட்டணம் நீ.ம.க.ரூ.8,264/–ல் ஏற்கனவே செலுத்தியது போக எஞ்சியுள்ள நீதிமன்ற கட்டணத்தை இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.

மற்ற முக்கிய விவரங்கள்

மனு தாக்கல் செய்த தேதி	23.12.2022

மனு உத்தரவான தேதி	28.07.2026
மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை	ரூ.17,00,000/-
மனுவில் உத்தரவான இழப்பீட்டுத்தொகை	ரூ.8,89,122/-
முழு நீதிமன்றக் கட்டணம்	ரூ.8,264/-
முன்னரே செலுத்தப்பட்ட நீதிமன்றக் கட்டணம்	ரூ.20/-
பாக்கி செலுத்தப்பட வேண்டிய நீ.ம.கட்டணம்	ரூ.8,244/-

<u>செலவுத்தொகைப் பட்டியல்</u>

செலவு தொகை விபரம்	ரூ.பை.
இழப்பீட்டுத்தொகைக்குரிய முத்திரைக்கட்டணம்	8,264.00
வக்காலத்து	10.00
மனு தயாரிக்க	200.00
கட்டளை தயாரிக்க, சேர்ப்பிக்க	50.00
வழக்கறிஞர் கட்டணம்	17,391.00
ஆதரவுகளுக்கான முத்திரை கட்டணம்	120.00
மொத்தம்	26,035.00

என்னால் இந்த உத்திரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 28 தேதியன்று அவையறிய பகரப்பட்டது.

K THANGAMANI

Digitally signed by K THANGAMANI
Date: 2026.08.28 17:59:50 +0530

முன்னிலை அலுவலர்(சார்பு நீதிபதி)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்
நாமக்கல்

<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>

ம.சா.1 –செல்வராஜு

ம.சா.2 – ஜெகநாதன்

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>

ம.சா.ஆ.1	முதல் தகவல் அறிக்கை

ம.சா.ஆ.2	சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை
ம.சா.ஆ.3	காப்பீட்டு பாலிசி
ம.சா.ஆ.4	வாகனப்பதிவு சான்றிதழ்
ம.சா.ஆ.5	மோட்டார் வாகன ஆய்வறிக்கை
ம.சா.ஆ.6	இறுதி அறிக்கை
ம.சா.ஆ.7	பிரேத பரிசோதனை அறிக்கை
ம.சா.ஆ.8	இறப்புச்சான்றிதழ்
ம.சா.ஆ.9	வாரிசு சான்றிதழ்
ம.சா.ஆ.10	விடுவிப்பு சான்றிதழ்
ம.சா.ஆ.11	விடுவிப்பு சான்றிதழ்
ம.சா.ஆ.12	காயச்சான்றிதழ்
ம.சா.ஆ.13	விடுவிப்புசான்றிதழ்
ம.சா.ஆ.14	மருத்வமனை பில்கள்
ம.சா.ஆ.15	மாதிரி வரைபடம்
ம.சா.ஆ.16	1ம் மனுதாரரின் ஆதார் அட்டை
ம.சா.ஆ.17	1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம்
ம.சா.ஆ.18	1ம் மனுதாரரின் பான்கார்டு
ம.சா.ஆ.19	2ம் மனுதாரரின் ஆதார் அட்டை
ம.சா.ஆ.20	2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம்
ம.சா.ஆ.21	2ம் மனுதாரரின் பான்கார்டு
ம.சா.ஆ.22	3ம் மனுதாரரின் ஆதார் அட்டை
ம.சா.ஆ.23	3ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம்
ம.சா.ஆ.24	3ம் மனுதாரரின் பான்கார்டு
ம.சா.ஆ.25	4ம் மனுதாரரின் ஆதார் அட்டை
ம.சா.ஆ.26	4ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம்
ம.சா.ஆ.27	4ம் மனுதாரரின் பான்கார்டு
ம.சா.ஆ.28	ஆதார் அட்டை

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் :

எ.ம.சா.1	வடிவேலு
எ.ம.சா.2	செல்வசேரன்

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள்:

சா.சா.ஆ.1	அனுமதி கடிதம்
சா.சா.ஆ.2	மோட்டார் வாகன ஆய்வறிக்கை
எ.ம.சா.ஆ.1	காப்பீட்டு பாலிசி
எ.ம.சா.ஆ.2	வழக்கறிஞர் அறிவிப்பு
எ.ம.சா.ஆ.3	ஒப்புகை அட்டைகள்
எ.ம.சா.ஆ.4	உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி வந்த கவர்கள்

குறிப்பு :

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் சோழமண்டலம் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட் எதிர் அய்யனார் மற்றும் ஒருவர் 2020 (4) CTC 272 என்ற வழக்கில் பிறப்பித்துள்ள உத்திரவின்படி இத்தீர்ப்பாயம் தீர்ப்பாணை எதுவும் வனைய வேண்டியதில்லை என தீர்மானிக்கப்படுகிறது.

K THANGAMANI

Digitally signed by K THANGAMANI
Date: 2026.08.28 17:59:59 +0530

முன்னிலை அலுவலர்(சார்பு நீதிபதி)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்
நாமக்கல்

	MCOP No.188/2025 DATE: 28.07.2026 FAIR/DRAFT

MCOP No.188/2025
DATE: 28.07.2026
மனுதாரரின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு,

(1) 2ம் எதிர்மனுதாரர் 1 முதல் 4 மனுதாரர்களுக்கு இழப்பீடாக ரூ.8,89,122/- செலுத்தவேண்டும் என்றும் இந்த இழப்பீட்டுத்தொகையை சட்டப்படி இவ்வுத்திரவின் அடிப்படையிலேயே 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டும் (Pay and Recover) என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(2) மேற்படி இழப்பீட்டுத்தொகைக்கு மனு தேதியிலிருந்து தொகை செலுத்தும் காலம் வரையிலும் 7.5 % வட்டி மற்றும் செலவு தொகை சேர்த்து 2ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டும்.

(3) மேற்படி மனு இடையில் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பின் அந்த காலங்களுக்கு மனுதாரர்களுக்கு வட்டி கிடைக்கத்தக்கதுதல்ல என்றும்

(4) மேற்படி இழப்பீட்டுதொகையினை இவ்வுத்தரவு நாளிலிருந்து 2 மாத காலத்திற்குள் 2ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற வங்கி கணக்கான State Bank of India Account No.43360446669 ல் E-Transfer மூலம் செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தியதற்கான வங்கிக்கு அனுப்பிய அறிவுரையினை நீதிமன்றத்தில் உடனடியாக தாக்கல் செய்ய வேண்டும்.

(5) மேற்படி இழப்பீட்டு தொகையினை பொருத்தவரையில் 1ம் மனுதாரருக்கு ரூ.5,89,122/- மும் 2 முதல் 4 மனுதாரர்களுக்கு தலா ரூ1,00,000/- (ரூ.1,00,000/-x3 = ரூ.3,00,000/-) மும், 1 முதல் 4 மனுதாரர்களுக்குரிய தொகை முழுவதையும் மனு தாக்கல் செய்வதன் மூலம் தங்களது வங்கிக் கணக்கின் மூலம் பெற்றுக்கொள்ளவேண்டுமெனவும்,

(6) வழக்கறிஞர் ஊதியம் ரூ.17,391/- அவரது வங்கி கணக்கிற்கு E-Transfer மூலம் செலுத்தி வைக்கப்படும்.

(7) மேற்படி நஷ்ட ஈட்டுக்குரிய நீதிமன்ற கட்டணம் நீ.ம.க.ரூ.8,264/-ல் ஏற்கனவே செலுத்தியது போக எஞ்சியுள்ள நீதிமன்ற கட்டணத்தை இவ்வுத்திரவு பிறப்பிக்கப்பட்ட 15 தினங்களுக்குள் மனுதாரர் செலுத்தவேண்டுமென்று உத்திரவிடப்படுகிறது.

முன்னிலை அலுவலர்(சார்பு நீதிபதி)
மோ.வா.வி.இ.கோ.தீர்ப்பாயம்
நாமக்கல்